செய்தி வெளியீடு எண் :147 நாள் : 02.03.2016

**செய்திக் வெளியீடு**

**சிறந்த ஆதிதிராவிடர் எழுத்தாளர்களுக்கு தமிழக அரசு உதவித்தொகை**

தமிழக அரசின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டுப் பணிக்கான(ADATA FOUNDATION) நிதியிலிருந்து 2015–2016–ஆம் ஆண்டிற்கான சிறந்த ஆதிதிராவிடர்/ மதம் மாறிய கிறித்துவர்/பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த 10 எழுத்தாளர் மற்றும் ஆதிதிராவிடர் பற்றி எழுதும் ஆதிதிராவிடர் அல்லாத ஒருவர் ஆக மொத்தம் 11 சிறந்த எழுத்தாளர்களுக்கு பரிசு வழங்கப்படும். இதற்கான நூல் வெளியிட ரூ.40,000/– வரை நிதியுதவி அளிக்கப்படும். பெயர், முகவரி, படைப்பின் பொருள், போன்ற விவரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். இது குறித்த விவரங்களை தமிழக அரசின் tn.gov.in என்ற இணையதளத்தில் (website) அறிந்து கொள்ளலாம். மேலும் அந்தந்த மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

முறையான விண்ணப்பத்துடன் படைப்புகள் எழுத்து வடிவில் 2 பிரதிகள், விண்ணப்பதாரரின் கைபேசி எண்கள் குறிப்பிடப்பட்டு, அரசுக்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள்.31.03.2016.

**அனுப்ப வேண்டிய முகவரி**

இயக்குநர்,<br>
ஆதிதிராவிடர் நலம்,<br>
சென்னை–05.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலிந்த/ சிறந்த எழுத்தாளர்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டம் விண்ணப்பப்படிவம்**

| 3.5 C.M X 4.5 C.M<br><br>புகைப்படம் |
|---|

| | | |
|---|---|---|
| 1. | நூலாசிரியர் பெயர்/முகவரி | : |
| 2. | பிறந்த நாள் / அகவை<br>(சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | : |
| 3. | நூலின் பெயர் | : |
| 4. | நூலின் கருப்பொருள் | : |
| 5. | தற்போதைய தொழில் விவரம் | : |
| 6. | அரசிடமிருந்து பெற விரும்பும் நிதி உதவித்தொகை (ரூ.40,000/–க்கு மிகாமல் ) | : |
| 7. | இந்நூல் வெளிவருவதால் சமுதாய வளர்ச்சிக்கு பயன்படும் விவரம் (தேவைப்படின் தனித்தாளில் எழுதி இணைக்கலாம்) | : |
| 8. | சாதி சான்று/இருப்பிடச் சான்று நகல் (சான்றொப்பம் பெற்று இணைக்கப்பட வேண்டும்) | : |
| 9. | தொடர்பு தொலைபேசி/கைபேசி எண். | : |

நாள் விண்ணப்பதாரர் ஒப்பம்

**உறுதிமொழி**

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படைப்பு எனது சொந்த படைப்பு. நான் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ மதம் மாறிய கிறித்துவர்/பிற வகுப்பைச் சார்ந்தவர் என சுய சான்றுரை அளிக்கிறேன்.